**செய்தி வெளியீடு எண் : 601** **நாள் : 23.03.2023**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்கள் தலைமையில் இன்று (23.03.2023) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரக பனகல் மாளிகை கட்டிட கூட்டரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்களின் பணிமுன்னேற்றம் குறித்து கூடுதல் ஆட்சியர்கள்/திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி திரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப, மற்றும் துறையின் கூடுதல் இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர். இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரகவளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

அரசின் முன்னுரிமைத் திட்டங்களான குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம், முதலமைச்சரின் கிராமசாலைகள் மேம்பாட்டுத்திட்டம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், ஊரக குடியிருப்புத்திட்டங்கள், சமத்துவபுரம் வீடுகள் புணரமைத்தல், கிராம ஊராட்சிகளில் குடிநீர், தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட வற்றை ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார்கள். திட்டப்பணிகள் மக்களுக்கு உரிய முறையில சென்றடையும் வகையில் உரிய காலங்களில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் தரைத்தளத்தில் புதுப்பிக்கப்பட்டு கூடுதல் வசதிகளுடன் கூடிய அலுவலகப் பகுதியினை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு இன்று திறந்து வைத்து வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in